# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW9

| | | | |
|---|---|---|---|
| Name | : பரமேஸ்வரன் | Caste | : |
| S/o.W/o.D/o. | : கணேசன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 21.01.2025.

A1 & A2 present.

முதல் விசாரணை;

நான் நாயக்கன்காடு கெஜல்நாயக்கன்பட்டியில் குடியிருக்கிறேன். நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். இதற்கு முன்னர் லாரி வைத்து மணல் வியாபாரம் செய்து வந்தேன். சுமார் 10 வருடத்திற்கு முன்னர் 22.12.2014 அன்று தொட்டியத்தில் மணல் லோட் ஏற்றுவதற்காக நான் சென்றிருந்தேன். எனக்கு முன்னர் கணேசன் என்பவர் டிப்பர் லாரியில் மணல் லோட் ஏற்றிக்கொண்டிருந்தார். நான் பேசிக்கொண்டிருந்தபோது ஓனர் போன் செய்கிறார், நான் கிளம்புகிறேன்

என்று கிளம்பிவிட்டார். அதற்கு பின்னர் நான் லோட் ஏற்றிக்கொண்டு சேலம் நோக்கி வந்துகொண்டிருந்தேன். சந்தியூர் என்ற இடத்தில் மேற்படி கணேசன் ஓட்டி வந்த டிப்பர் லாரி விபத்தாகி வலதுபுறம் நின்றிருந்தது. நான் என்னுடைய லாரியை விபத்து நடந்த இடத்தில் நிறுத்திவிட்டு என்னானது என்று சென்று பார்த்தேன். டிப்பர் லாரி சென்டர் மீடியனில் மோதி பஸ்சில் மோதி ஒரு டு வீலரில் மோதி பள்ளத்தில் இறங்கி நின்றதாக சொன்னார்கள். நான் பார்க்கும்போது டிப்பர் லாரி ஓடையில் பள்ளத்தில் இறங்கியிருந்தது. இருசக்கர வாகனத்தில் வந்த 3 பேர்கள் சம்பவ இடத்தில் இறந்துவிட்டதாகவும் டிப்பர் லாரியின் க்ளீனர் குமாரும் மற்றும் 2 நபர்களும் மருத்துவமனையில் கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் காலையில் லோட் ஏற்றிக்கொண்டிருக்கும்போது குமார் என்பவரும் என்னிடம் பேசினார். டிப்பர் லாரி டிரைவர் கணேசனை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும் அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். நான் ஓட்டி வந்த வாகனத்தின் பதிவு எண். டிஎன் 47 சி 2729 ஆகும். கணேசன் ஓட்டி வந்த வாகனத்தின் பதிவு எண் டிஎன் 29 என்று மட்டும் தெரியும். பதிவு எண் பற்றிய மற்ற விவரங்கள் தெரியாது. இது சம்மந்தமாக டிஎஸ்பி அவர்கள் என்னை விசாரித்தார்.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவ சமயத்தில் நான் சொந்தமாக லாரி வைத்து மணல் லோட் ஏற்றி தொழில் செய்து வந்தேன் என்றால் சரி. எனக்கு கணேசனின்

அப்பா பெயர் மற்றும் விலாசம் பற்றி தெரியாது என்றால் சரி. நான் காவல்நிலையத்திற்கு வழக்கு சம்மந்தமாக எத்தனை முறை சென்றேன் என்றால் நான் காவல்நிலையத்திற்கே செல்லவில்லை. என்னை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் பனமரத்துப்பட்டி பிரிவு ரோட்டில் வைத்து விசாரித்தார்கள். தொட்டியத்தில் நான் மணல் லோட் ஏற்றும்போது நான் கணேசனை பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சந்தியூர் பிரிவு ரோட்டில் கணேசனை பார்த்ததாக போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மணல் வியாபாரம் செய்வதால் போலிசாரின் உதவி தேவைப்படுவதால் நான் போலிசாரின் இருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் மணல் லோட் எடுப்பதற்காக உரிமத்தை என்னை விசாரித்தபோது வைத்திருந்தேனா என்றால் வைத்திருந்தேன். அதன் நகலை போலிசார் என்னிடம் வாங்கினார்களா என்றால் இல்லை. என்னிடம் மணல் லோட் எடுக்க உரிமம் உள்ளதா என்று போலிசார் கேட்டார்களா என்றால் இல்லை. நான் சம்பவத்தன்று மணல் எடுக்க சென்றதாகவும், கணேசனை பார்த்ததாகவும், கணேசனின் ஓனர் போன் செய்து வரச்சொன்னதாக நான் சொல்வது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.